(இ) அரசாங்க விழாக்களில் தொகுதி உறுப்பினர்கள் இடம் பெறச் செய்வது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் முன்பே உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அதாவது எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியிலே நடைபெறுகின்ற அரசாங்க விழாக்களுக்கும், நிச்சயமாக அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும். அவர்களையும் சேர்த்து அந்த விழா கொண்டாடப்படும் என்று ஏற்கனவே 2, 3 முறை உறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் மாலையில் என்னுடைய எழும்பூர் தொகுதியில் ஒரு மருத்துவமனை திறப்புவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அது குறித்து எனக்குத் தகவல் இல்லை. அதேபோன்று 3 மாதங்களுக்கு முன்னால் தாலுகா அலுவலகத்தின் கால்கோள்விழா என்னுடைய தொகுதியில் நடைபெற்றது. அதற்கும் எனக்குத் தகவல் தரப்படவில்லை. செய்தியும் கொடுக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதை விளக்குவாரா? இப்படி நிகழாமல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று நான் இங்கே ஏற்கனவே தெளிவுபடுத்தி சொல்லி இருக்கிறேன். சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய தொகுதிகளில் அங்கே அரசு நிகழ்ச்சிகள் நிகழுமேயானால், அந்தத் தொகுதிக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இடம் பெறச் செய்வது முறையென்று சொல்லி, அதை எல்லா இலாகாவினர்க்கும் எடுத்துக் சொல்லி இருக்கிறோம். இன்னும் கூட ஒரு படி மேலே போய் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட, அந்த நிகழ்ச்சிகளிலே பெயர்களைப் போட்டு வையுங்கள் என்றுதான் சொல்லி இருக்கிறேன். நான் கலந்து கொள்ளுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலே அவர்கள் கலந்து கொண்டாலும், கலந்து கொள்ளாவிட்டாலும் அவர்கள் அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் எனபதையாவது மக்கள் தெரிந்து கொள்ளட்டும் (குறுக்கீடு) என்ற அளவிற்குப் போடச் சொல்லி இருக்கிறேன். பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினாலே அவர்கள் வராவிட்டாலும் கூட, ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட நாளில் 4 நாள், 3 நாட்களிலே நிகழ்ச்சி ஏற்பாடு செய்கின்றபோது ஒவ்வொருவருடைய இசைவுப் பெற்று—நீங்கள் வருகின்றீர்களா? இல்லையா என்று கேட்டுத் தெரிந்து போட முடியாத சூழ்நிலை இருப்பதன் காரணமாக அவர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு வையுங்கள்; வராவிட்டாலும் கூட பரவாயில்லை என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூறுவது போன்று அவருடைய தொகுதியிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலே அவருடைய பெயர் விடுபட்டிருக்குமானால் அது வருந்தத்தக்கது. அதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து அதை நீக்குவதற்கான முயற்சிகளை அந்தந்த துறையினரும் மேற்கொள்வார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொன்ன இந்தப் பதிலே எல்லா துறையினர்களுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்து எதிர்காலத்திலே நடந்து கொள்வதற்கு வழி முறையாக அமையும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானால் வராமல் இருக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதிக்குப் போவதைத் தவிர வேறு வேலை கிடையாது. அதனாலே சட்டமன்ற உறுப்பினர்கள் விட்டுப்போகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

(ஈ) உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தைத் தவிர்ப்பது பேரவை தலைவரான உங்களுடைய பொறுப்பாகும். நேற்றைய தினம் இரவிலே சட்டமன்ற விடுதியில் சிறிதளவு கூட தண்ணீர் இல்லை. குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அங்கே 'வாட்டர் கூலர்' இருந்தது. இப்போது அதனுடைய ஸ்டான்டு மட்டும்தான் அங்கே இருக்கின்றது. எனவே உறுப்பினர்களுக்கு ஏற்பாடு குறைந்தபட்ச குறைபாடுகளை தீர்ப்பதற்கு முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லபடியாக தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-20)

4. கவன ஈர்ப்பு

கஸ்தூரிபாய்காந்தி மருத்துவமனையில் அரசு மருத்துவர் இறப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ப. வெங்கடசுப்பிரமணியம், டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.